17 MAR 1967
STATE LEGISLATURE MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 4th November 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (The Hon. Sri S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Mr. SPEAKER : Questions Nos. 401 to 415 relating to the Hon. Minister for Food are postponed at the request of the Hon. Minister as he is otherwise engaged.

Drinking Water Schemes

* 369 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have requested big municipalities in the State to set up water analysis laboratories for their major water-supply systems; and

(*b*) if so, the reasons therefor and the details thereof?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) Yes, Sir. Water has to be tested and treated properly to ensure the supply of safe drinkable water to the public at all times. This is being done now periodically at the Water Analysis Department, King Institute, Guindy. But as this is not adequate, local bodies, having water-supply schemes are advised to set up water analytical laboratories for the purpose.

திரு. வை. சங்கரன் : வாட்டர் சப்ளை ஸ்கீம் மேஜர், மைனர் என்று இரண்டுவிதமாக பிரிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியென்றால், எந்தெந்த முனிசிபாலிட்டிகளுக்கு அந்தமாதிரி வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மேஜர், மைனர் வாட்டர் ஸ்கீம்ஸ் என்று கிடையாது. வாட்டர் சப்ளை ஸ்கீம்ஸ் ஏற்படுத்துவதற்கு எந்தெந்த முனிசிபாலிட்டிகளுக்கு வாட்டர் சப்ளை, ட்ரெய்னேஜ்களுக்கு கவர்ன்மென்ட் கிராண்ட் கொடுத்திருக்கிறார்களோ, அதோடுகூட அனலடிகல் டெஸ்ட் செய்வதற்கு வசதி செய்ய வேண்டுமென்று இருக்கிறது.

திரு. வை. சங்கரன் : புதிதாக வாட்டர் சப்ளை ஸ்கீமுக்கு அப்ளை பண்ணுகிறவர்களுக்கு மட்டுமா ? அல்லது ஏற்கனவே உள்ள முனிசிபாலிட்டிகளுக்கு மட்டுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மேஜர் முனிசிபாலிட்டிகளுக்கு உண்டு. ஏற்கனவே உள்ளவர்களுக்குத்தான் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இனிமேல் வருவதைப்பற்றி பிறகுதான் யோசிக்கப்படும்.

திரு. எஸ். முருகையன் : யாத்ரிக ஸ்தலங்களாக உள்ள நகர சபைகளுக்கு குடிதண்ணீர் திட்டம் அமல்படுத்தப்பட்டிருக்கிறதா? எத்தனை நகரசபைகளுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது? இன்னும் குடிதண்ணீர் வழங்கப்படாமல் இருக்கும் நகர சபைகள் எத்தனை?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

* 370 கேள்வி.—திருமதி செகதாம்பாள் வேலாயுதம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செயங்கொண்ட சோழபுரத்திற்கு குடிநீர் வசதி செய்து தர கொள்ளிடத்திலிருந்து நீர் கொண்டு வரும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டத்திற்கு செலவாகும் தொகை எவ்வளவு ?

(உ) இத்திட்டத்தை மேலும் விஸ்தரித்து பல கிராமங்கட்கும் நீர் விநியோகிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையிலுள்ளதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) முதல் (உ) வரை இல்லை ; அவ்விதமான யோசனை இல்லை.

திருமதி செகதாம்பாள் வேலாயுதம் : தலைவர் அவர்களே, செயங்கொண்ட சோழபுரத்திற்கு கொள்ளிடத்திலிருந்து குடி தண்ணீர் கொண்டுவருவதற்கு போட்ட திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? ஏற்கனவே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது? அது வருமா? வராதா? குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்குத் தயங்குவானேன் ? அவலச்சேரியில் முதலியார் தெருவில் உள்ள ஏரியில் ஒரு குடம் இரண்டு குடம் தண்ணீர் எடுக்க போலீஸ் பந்தோபஸ்து போட்டு விடுகிறார்கள். இந்த நிலையில் அங்கே ஒரு ஓவர் ஹெட் டாங்க் அவசியம் போடவேண்டும். "உங்களால் தான் வரவில்லை" என்று அங்கே உள்ளவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அதைக்கட்டிக் கொடுத்து குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தற்போது இரண்டு கோடி ரூபாய் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நகரசபைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பத்தாயிரம் ஜனத்தொகையுள்ள நகரசபைகளுக்கு குடிதண்ணீர் வழங்கப்படும். ஜெயங்கொண்டானைப் பொறுத்தவரை அது இவ்வாண்டு சேர்க்கப்படவில்லை அது பரிசீலனையில் இருக்கிறது.